[1968 ஆகஸ்ட் 16

கற்கண்டு உற்பத்தி ஆலைகள்

*8 வினா.—திரு. ரா. ரா முனுசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் சர்க்கரை கோட்டாவைக் கொண்டு கற்கண்டு உற்பத்தி செய்யும் ஆலைகள் எத்தனை இருக்கின்றன ?

(இ) அவைகளுக்கு வழங்கப்படும் சர்க்கரை, கற்கண்டு உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதாக அரசாங்கத்துக்கு புகார்கள் எவையேனும் வந்துள்ளனவா ?

(உ) ஆமெனில், இதனைத் தடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

(அ) திண்டிவனம் நகரம்—7 (ஏழு).
செஞ்சி நகரம்—1 (ஒன்று).

(இ) இதுவரை எந்தப் புகாரும் வரவில்லை.

(உ) கேள்வி எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம், திண்டிவனம் இந்தப் பகுதிகளில் கற்கண்டு செய்வதற்காக கோட்டா கொடுக்கும்பொழுது அதில் கற்கண்டு செய்யாமல் கள்ளமார்க்கட்டில் அதை விற்பதாக பொதுமக்கள் கூறுகிறார்கள். அப்படி கோட்டா வழங்கினால் இனிமேலாவது அவர்கள் அதைச் செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்களா என்று பார்த்து வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முன்பு நடந்ததை கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏப்ரல் மாதம் கற்கண்டு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கரைக் கோட்டா கொடுக்கப்பட்டது. 1967-ஆம் வருடம் மே மாதம் 5 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 2 மாதங்களுக்கு 100 மூட்டை என்றால் அதில் 20 மூட்டை அதற்குக் கொடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. இது சம்பந்தமான புகார் இப்பொழுது எங்குமே இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஓப்பன் மார்க்கட்டில் சர்க்கரையின் விலை குறைந்து வருகிறது. அதேபோல் ரேஷன் மூலம் தரப்படுகின்ற சர்க்கரை விலையையும் குறைக்க—மற்ற விலைவாசிகளும் குறைந்திருப்பதையொட்டி—அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1968 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொது மார்க்கட்டிலே சர்க்கரை விலை குறைந்திருக்கிறது. அதனாலே ரேஷனிலே கொடுக்கிற சர்க்கரை விலையையும் குறைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொது மார்க்கட்டில் விலை குறைந்திருக்கிறது என்ற அடிப்படையில் ரேஷனில் போடுகின்ற சர்க்கரை விலையையும் குறைக்க அரசு யோசிக்கிறது.

(உறுப்பினர் திரு. கதிரவன் பேரவையினுள் நுழைந்தார்—பலத்த ஆரவாரம்)

இது சர்க்கரையான கேள்வி என்று சொல்கிறார்கள்—சர்க்கரையான பதில்கூட—அதோடு திரு. கதிரவன் வந்ததற்காக அதற்கும் சேர்த்து கைதட்டினார்கள். வருகிற 23-ஆம் தேதியிலிருந்து கிலோ ரூபாய் 1.75 ஆக இருப்பதை ரூபாய் 1.69 க்குக் கொடுக்கலாம் என்று முடிவெடுத்து அதற்கு முதலமைச்சர் அவர்களின் ஆணை கோரப்பட்டு இருக்கிறது. அது கிடைத்து விடும். வருகிற மாதம் 23-ஆம் தேதியிலிருந்து ரூபாய் 1.75 விலைக்குக் கிடைக்கிற சர்க்கரை ரேஷன் கடைகளில் ரூபாய் 1.69-க்குக் கிடைக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கற்கண்டு செய்வதற்காக கொடுக்கப்படுகிற சர்க்கரை குறைந்த விலை சர்க்கரையா அல்லது அதிக விலை சர்க்கரையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஒரு மாதம் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு அடுத்த மாதம் 5 சத விதம் என்ற முறையில் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு 20 சத விதம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ஓப்பன் மார்க்கட்டில் கிடைப்பதால் யாருமே கற்கண்டிற்காகக் கேட்பதில்லை, இப்பொழுது கொடுக்கப்படுவதில்லை. கற்கண்டு செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது குறைந்தபட்சம்தான். அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு இப்பொழுது அந்த நிலைமையும் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கற்கண்டு உற்பத்தியாளர்கள் திண்டிவனத்தில் ஏழும், செஞ்சியில் ஒன்றும் என்று எண்ணிக்கையைச் சொன்னார்கள். அந்த நபர்கள் யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தமாதிரி ஒவ்வொரு கேள்விக்கும் நபர்களைப் படித்துக்கொண்டிருந்தால் சட்டசபையில் ஒரு புதிய சம்பிரதாயம் ஏற்பட்டு விடும். திண்டிவனத்தில் ஏழும், செஞ்சியில் ஒன்றும் என்ற எண்ணிக்கைதான் கூறலாம், முழு அட்டவணையுமே படிப்பது புதிய சம்பிரதாயத்தைத் தோற்றுவித்துவிடும்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கற்கண்டுக்காக ஒதுக்கப்பட்ட சர்க்கரை பிளாக் மார்க்கெட்டில் விற்கப்பட்டு அது சம்பந்தமாக இந்த அரசு அவ்வாறு விற்றவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைத்தான் நான் முன்பே சொன்னேன். கற்கண்டுக்காக சர்க்கரை ஒதுக்குகிற காரியமே ஒரு மாதந்தான் நடைபெற்றது. அதற்குப் பிறகு அந்த முறையில் முறைகேடான காரியங்கள் நடைபெறுவதற்கு வழி இல்லை. கற்கண்டு மருந்து போன்றவற்றுக்கு அவசியமான பொருள் என்ற காரணத்தால் 100 மூட்டை கொடுக்கின்ற இடத்தில் ஐந்து மூட்டைதான் கொடுக்கப்பட்டது. அதுவும் பின்னர் அடியோடு நிறுத்தப்பட்டது. ஆகவே, இதுசம்பந்தமான வழக்குகள் எதுவும் வரவில்லை. வருவதற்கு வழியும் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, sugar is being distributed to the consumers in two ways. Sugar is distributed under the family card system at a reduced rate. Then if a special permit is required by the consumers for some special purpose, the Civil Supplies Department insists that the sugar should be purchased in the open market . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கற்கண்டு உற்பத்திக்குக் கொடுக்கப்படுகிற சர்க்கரை சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றிய கேள்வி இது. இதிலே . . .

திரு. கே. விநாயகம்: அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இப்பொழுது அளித்த விடையிலிருந்து கேட்க முடியாது.

THIRU K. VINAYAKAM: What a strange thing! Arising out of the answer given by the Hon. Minister, I can put a question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதல் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM: Certainly. Whereas the consumer is made to pay a higher price for the special quota of sugar and whereas it causes great inconvenience to the consumer, will the Government think of revising their decision and supplying sugar at the reduced rate?

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member knows that consumers do not make any profit out of the sugar purchased by them. The higher price is for the people who purchase sugar to manufacture something out of it and get something out of that, and therefore that price is high.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: சர்க்கரை விலையை நிர்ணயிக்கும்போது சர்க்கரை ஆலைகள் சரியான லாபத்தைத் தங்களுக்கு வைத்துக் கொள்ளும்போது கரும்புக்கும் அந்த முறையில் விலை நிர்ணயிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தற்போது கரும்பு விவசாயிகள் அதிகமான விலையைப் பெறுகிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.